DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.1 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 418/ 2018 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 1 |
| Name | திரு.முருகன் என்ற பாலமுருகன் |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | |

**(எதிரி ஆஜர்)**

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 28-06-2023.

**முதல்விசாரணை**

1. நான் பேரூரில் குடியிருக்கிறேன். டெய்லராக வேலை செய்கிறேன். ஆஜர் எதிரியை தெரியாது.

2. கடந்த 03.03.2018 ம் தேதி வல்லநாட்டில் இருந்து தனியார் கம்பெனியில் வேலைக்கு சென்று விட்டு திரும்ப திருவைகுண்டம் வந்து பொருட்கள் வாங்கிவிட்டு எங்கள் ஊரைச்சேர்ந்த நல்லத்தம்பி என்பவருடன் இருச்சக்கர வாகனத்தில் எங்கள் ஊருக்கு சென்று கொண்டு இருந்த போது ஆயத்துறை முக்கு தாண்டியதும், இரவு சுமார் 9.30 மணி அளவில் திருநெல்வேலி செல்லும் அரசுப்பேருந்து வேகமாக வந்தது. இருச்சக்கர வாகனத்தை ஓட்டிய நல்லத்தம்பி நிறுத்தி விட்டார்.இருப்பினும் அரசுப்பேருந்தின் வலது புற பின்பகுதி நாங்கள் சென்ற வாகனத்தின் மீது இடித்து விட்டது.

3. எனக்கு வலது காலில் முறிவு ஏற்பட்டு ஒரு விரல் தற்போது இல்லை. என்னுடன் வந்த நல்லத்தம்பி என்பவருக்கும் வலது புற காலில் தான் காயம் ஏற்பட்டது. மருத்துவமனை செல்லும் வரை நன்றாகத்தான் இருந்தார். திருநெல்வேலி அரசுமருத்துவமனையில் சிகிச்சைக்கு சென்ற பின்பு இறந்து போய்விட்டார். அரசுப்பேருந்தை ஓட்டியவர் யார் என்று எனக்கு தெரியாது.

4.என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள பாலமுருகன் என்ற கையொப்பம் என்னுடையதுதான்.

5. **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

6. போலீசார் என்னை விசாரித்த போது முதல் விசாரணையில் சொன்ன விபரத்தை தான் சொன்னேன் என்றால் ஆமாம். நான் சென்ற இருச்சக்கர வாகனத்தில் ஆர்சி புத்தகம் யார் பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியாது. இறந்து போன நல்லத்தம்பிக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்று எனக்கு தெரியாது.

7. அந்த பகுதியில் வாகனங்கள் அதிகமாக வரும் என்றால் பொதுவாக வரும். பேரூர் பேருந்து நிறுத்ததில் ஆட்களை இறக்கிவிட்டுவிட்டுதான் பேருந்து வரும் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும இடமானது பேரூர் பேருந்து நிறுத்தம் அடுத்து வேகத்தடை அடுத்து தெற்கு பக்கம் திரும்பியதும் என்றால் சரிதான். அந்த பகுதியில் சிறிய வளைவு உள்ளது என்றால் ஆமாம்.

8. பொதுவாகவே அந்த பகுதியில் நான்கு சக்கர வானகங்கள் மெதுவாகத்தான் வரும் என்றால் சரியல்ல. சம்பவ இடமானது பஸ்ஸ்டாப்பில் இருந்து அரை கிமீ தள்ளி தான் உள்ளது என்றால் சரிதான். ஆயத்துறை பஸ்ஸ்டாப்பிற்கு 20 அடி வடக்கே சம்பவம் நடந்தது என்றால் சரிதான்.

9. அரசுப்பேருந்தின் பின்பகுதி நான் சென்ற வாகனத்தில் மோதியதாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. நாங்கள் சென்ற இருச்சக்கர வாகனத்திற்கு காப்பீடு, ஆர்சி புத்தகம், அதனை ஓட்டிவருக்கு உரிமம் இல்லாததால் நாங்களே தன்னால் கீழே விழுந்த காயத்திற்கு இழப்பீடு பெறுவதற்காக அரசுப்பேருந்து மோதியதமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சென்ற இருச்சக்கரவாகனத்திற்கு காப்பீட்டு உரிமம் இல்லை என்றால் சரிதான்.

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1
ஸ்ரீவைகுண்டம்.

DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.1 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 418/ 2018 |
| Depostition of witness for | Prosecution wit. PW.2 |
| Name | திருமதி. மாரியம்மாள் |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | |

**(எதிரி ஆஜர்)**

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 28-06-2023.

**முதல்விசாரணை**

1. நான் பேரூரில் குடியிருக்கிறேன். 100 நாள் வேலைக்கு செல்வேன். அ.சா.1 எனது கணவர் ஆவார்.

2. கடந்த 03.03.2018 ம் தேதி எனது கணவர் வேலைக்கு சென்று விட்டு வரும் போது இரவு 9.45 மணி அளவில் ஆயத்துறை விலக்கு அருகில் விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டேன்.

3. எனது கணவர் வந்த வாகனத்தின்மீது அரசுப்பேருந்து மோதியதாக சொன்னார். தகவல் தெரிந்து நான் சம்பவ இடம் சென்று பார்த்தேன். எனது கணவருக்கும் , நல்லத்தம்பி என்பவருக்கும் காயம் ஏற்பட்டு இருந்தது . அதன்பின்பு சிகிச்சைக்காக எனது கணவரையும் நல்லத்தம்பி என்பவரையும் திருவைகுண்டம் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார்கள். பின்பு மேல் சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசுமருத்துவமனையில் சிகிச்சைக்கு அழைத்துசென்றார்கள். நல்லத்தம்பி என்பவர்திருநெல்வேலி அரசுமருத்துவமனையில் வைத்து இறந்து விட்டதாக சொன்னார்கள்.

5. என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள அறிவேன் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அன்றையதினம் இரவு மருததுவமனையில் வைத்து போலீசார் எனது கணவரிடம் புகார்

வாக்குமூலம் வாங்கினார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

6. விபத்து அரசுப்பேருந்து மோதியதால் ஏற்பட்டது என்று கேள்விப்பட்டதாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. அரசுப்பேருந்திருக்கும் இந்த விபத்துக்கும் எந்த சம்மந்தமும் கிடையாது என்றால் சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1
ஸ்ரீவைகுண்டம்.